சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.154/2019

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் நாள் பி,வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சி.தினேஷ் குமார், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | வயது | 65 |
| த/பெ | நஞ்சைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளியங்காடு கிராமம். | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | -- |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரி தான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி தான். பிரதிவாதிகளின் வழக்கறிஞர் தயார் செய்து வைத்து இருந்த என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். என் அப்பா பெயர் நஞ்சைய கவுடர். என் தாத்தா பெயர் சின்னன்ன கவுடர் என்றால் சரி தான். எனக்கு ஒரு தாத்தாவா இரண்டு தாத்தாவா என்றால் ஒரே தாத்தா தான். என்னுடைய அத்தை பெயர் சுப்பம்மாள் என்றால் சரி தான். என் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் 3 பேர். அவர்களின் பெயர் என்ன என்றால் கருப்பசாமி, கிருஷ்ணசாமி மற்றும் நான். எனது அப்பா உயிருடன் இருந்த போதே எனது அத்தை சுப்பம்மாள் என்பவருக்கு 1968-ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து உள்ளார் என்றால் சரி தான்..வா.சா.ஆ.5 தான் அந்த ஆவணம் என்றால் சரி தான். அந்த ஆவணத்தில் க.ச.எண்.724/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அது பழைய எண் ஆகும். புதிய எண்.498/2 பி என்றால் சரி தான். எனது அப்பா வண்டித்தடத்தை எழுதி கொடுத்து உள்ளார் என்றால் சரி தான். ஆனால் அவரது காலத்தில் அதை பயன்படுத்த வில்லை. அந்த

வண்டித்தடம் பயன்பாட்டில் தான் இருந்தது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. வா.சா.ஆ.5. எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.5 ல் மேற்படி காலையின் தென்கோட்டில் கிழமேலாக 5 முழ அகலத்தில் வண்டித்தடம் விடப்பட்டுள்ளது எனவும் இது நம் இருவரின் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் கால் தடமாக தான் உள்ளது. கால் தடமாக உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி யல்ல. உண்மையிலேயே அது கால் தடமாக இருந்தால் வா.சா.ஆ.5 ல் கால் தடம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் வண்டித்தடம் என குறிப்பிடப்பட்டிருக்காது என்றால் சரி யல்ல. வண்டித்தடம் என் தந்தைக்கும் என் அத்தைக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என வா.சா.ஆ.5 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் 50 வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்டதால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.498/2 சி வருவாய் துறையினரால் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு தனியாக சிட்டாவும் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பட்டா எண். 1595 என்றால் எனக்கு தெரியாது. அந்த பட்டாவில் என் பெயரும், வள்ளியம்மாள், சுப்பையன் மற்றும் ரஞ்சித் குமார் ஆகியோர்கள் பெயர்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இருக்கலாம். வா.சா.ஆ.10 பட்டாவில் என் பெயர் தான் முதல் பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். என் அத்தை சுப்பம்மாள் 1982 ம் ஆண்டில் அவருக்கு தானமாக வந்த சொத்தை பத்திரசாமி மற்றும் சுப்பையன் ஆகியோர்களுக்கு கிரையமாக கொடுத்து விட்டார் என்றால் சரி தான். வா.சா.ஆ.9 தான் அந்த ஆவணம் என்றால் சரி தான். வா.சா.ஆ. 9 ல் தென்கோட்டில் மேற்படி காலையில் கிழமேலாக 5 முழ அகலத்தில் வண்டித்தடம் சகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அத்தைக்கு கிரையம் கொடுத்த புல எண்கள்.498/2 பி, 498/2 சி ஆகியவை புல எண்கள் 468/2 ஏ நிலத்திற்கு கிழக்கு புறமாக உள்ளது என்றால் சரி தான். ஆனால் கிழக்கு புறம் பள்ளமாக உள்ளது. புல எண்.498/2 பி-க்கு கிழக்கு புறம் உள்ள பூமியை என் அத்தை மகன் கருப்புசாமி என்பவரிடம் வாதிகளின் கணவர்களான பத்திரசாமி மற்றும் சுப்பையன் ஆகியோர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி தான். என் அத்தையின் மகன்கள் பெயர் என்ன என்றால்

கருப்பசாமி மற்றும் நடேசன். என் அத்தை பையன்கள் இருவரும் அவர்களது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் இன்று நீதிமன்றத்திற்கு 1ம் பிரதிவாதி உடன் வந்தேன் என்றால் இல்லை. நானாக பஸ்சில் வந்தேன். அவர் காரில் வந்தாரா என்று எனக்கு தெரியாது. நான் புல எண்.486/1-ல் 1ம் வாதிக்கு எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்தேன் என்றால் 80 செண்ட் கிரையம் கொடுத்தேன். நான் 1ம் வாதிக்கு மொத்தம் 94 செண்ட் கிரையம் கொடுத்தேன் என்றும் ஆனால் 80 செண்ட் மட்டும் கிரையம் கொடுத்ததாக பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி யல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தான் நான் 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரி தான். வா.சா.ஆ. 2 ல் 94 செண்ட் கிரையம் கொடுத்ததாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. 80 செண்ட்க்கு தான் பணம் வாங்கினேன். 80 செண்ட் தான் கிரையம் கொடுத்தேன். 80 செண்ட் தான் கிரையம் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றும் 94 செண்ட்க்கு மறு பயன் பெற்றுக் கொண்டு 94 செண்ட் தான் 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரி யல்ல.

( 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.